பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

09 01 2025 **THURSDAY** 12 40 **PM** ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவின் நீடித்த வளர்ச்சியை, உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்..

2. இந்திய வம்சாவளியினரின் கடின உழைப்பு, இந்தியா மீது உலக நாடுகளுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

3. சிறைச்சாலைகளில் காசநோய் ஒழிப்புக்கான 100 நாள் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

4. பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.

5. போபால் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சாய் கார்த்திக் - விஷ்ணுவர்தன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

\>>>>>><<<<<<

பல்வேறு துறைகளிலும் இந்தியாவின் நீடித்த வளர்ச்சியை, உலக நாடுகள் உன்னிப்பாக கவனித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் 18வது வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய அவர், உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விரைவில் உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் 25 கோடி மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிலவில் உள்ள சிவசக்தி முனையில் சந்திரயான் விண்கலம் தரையிறங்கிய போது, நாம் அனைவரும் பெருமிதம் அடைந்ததாக கூறிய பிரதமர், இந்தியாவின் டிஜிட்டல் புரட்சியை கண்டு உலக நாடுகள் வியப்பதும் நமக்கு பெருமிதம் அளிப்பதாக தெரிவித்தார்.

வருங்காலத்தில் வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வருவோர், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விமானம் மூலம் பயணம் செய்யும் தருணம் விரைவில் உருவாகும் என்றும் குறிப்பிட்டார்.

மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து நாடு திரும்பியதை நினைவுகூரும் வகையில் இந்த மாநாடு நடத்தப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், தற்போது, பண்டிகைகள் நிறைந்த காலம் என்பதோடு, விரைவில் கும்பமேளா தொடங்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் விடுதலையில் வெளிநாடு வாழ் இந்தியர்களின் பங்களிப்பு அளப்பறியது என்றும் தற்போது இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற அவர்கள் பாடுபட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இந்தியா, இளைஞர்கள் அதிகம் உள்ள நாடாக மட்டுமின்றி, திறன்மிக்க இளையோர் உள்ள நாடாகவும் திகழ்வதாக அவர் குறிப்பிட்டார்.

வெளிநாடுவாழ் இந்தியர்கள் அந்தந்த நாடுகளில் இந்தியாவின் தூதர்களாக செயல்படுவதாகவும் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கென இயக்கப்படும் சிறப்பு சுற்றுலா ரயிலான பிரவாசி பாரதீய எக்ஸ்பிரஸ் ரயில் சேவையையும் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

உலகெங்கும் வசிக்கும் இந்திய வம்சாவளியினரின் கடின உழைப்பு காரணமாக, இந்தியா மீது உலக நாடுகளுக்கு பெரும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

இங்கிலாந்து சென்றுள்ள அவர், லண்டனில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றினார்.

இந்தியர்களின் சேவை கலாச்சாரம், பணி நெறிமுறை மற்றும் அவர்கள் வசிக்கும் நாடுகளுக்கான பங்களிப்பு போன்றவை இந்தியா மீது நல்லெண்ணம் ஏற்பட வழிவகுத்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் கொண்டாடப்படும், பொங்கல், மகர சங்கராந்தி, லோரி போன்ற பண்டிகைகள் நாட்டின் மதம், ஆன்மிகம் மற்றும் கலாச்சார உணர்வுகளை பிரதிபலிப்பதால், வெளிநாடுகளுக்கு சென்றாலும் இந்தியர்கள் இந்தப் பண்டிகைகளை சிறப்புடன் கொண்டாடி வருவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே லண்டனில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு திரு. ஓம் பிர்லா மரியாதை செலுத்தினார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் உள்ள சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகளில் காசநோய் ஒழிப்பு குறித்த 100 நாள் தீவிர விழிப்புணர்வு பிரச்சாரத்தை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்களையும் மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம், மாநில மற்றும் யூனியன் பிரதேச உள்துறை செயலாளர்கள், சிறைத்துறை தலைவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் மத்திய அரசின் காசநோய் ஒழிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் அடைக்கப்பட்ட நிலையிலும், அதிக நெரிசலுடனும் இருப்பதால், காசநோய் தொற்று பரவுவதற்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து சிறைகளிலும் காசநோய் குறித்த பரிசோதனைகளை அதிக அளவில் மேற்கொள்வதுடன், இம்மாதம் 27ஆம் தேதிமுதல் அடுத்த மாதம் 2ஆம் தேதி வரையிலான காலத்தில் காசநோய் ஒழிப்பு குறித்த உறுதிமொழியை ஏற்குமாறும் அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

**TATA Advanced Systems** நிறுவனம் தயாரித்துள்ள அதிநவீன கவச வாகனம், பாதுகாப்புத் துறைக்கும், தனியார் தொழில் துறையினருக்கும் இடையேயான ஒருங்கிணைப்புக்கு சிறந்த உதாரணமாக திகழ்வதாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த கவச வாகனம் **DRDO** நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வாகன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தால் முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைத்து, தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கவச வாகனம், நமது போர்த் திறனை அதிகரிப்பதுடன் நீண்டகாலம் பயன்தரக்கூடியது என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார்.

சென்னை, சைதாப்பேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் முழு கரும்பு அடங்கிய பரிசுத்தொகுப்பை முதலமைச்சர் வழங்கினார்.

மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை தொடங்கி வைத்தனர்.

இதனிடையே, மாதந்தோறும் வழங்கப்பட்டு வரும் மகளிர் உரிமைத் தொகையை, பொங்கல் திருநாளை ஒட்டி, இன்றே வழங்க முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதன் மூலம் ஒரு கோடியே 14 லட்சத்து 61 ஆயிரம் மகளிர் பயன் பெறுவார்கள்.

>>>>>><<<<<<

பல்கலைக் கழக துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பாக யுஜிசி வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை திரும்பப்பெற வலியுறுத்தி தமிழக சட்டப்பேரவையில் இன்று தனித்தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், கல்வி பொதுப்பட்டியலில் உள்ளதால், யுஜிசி கொண்டு வந்த திருத்தம், கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிரானது என்று தெரிவித்தார்.

துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஆளுநர்களிடம் அளிக்கும் இந்த திருத்தத்தை எதிர்த்து, மாநில அரசு அரசியல் ரீதியாகவும், சட்ட ரீதியாகவும் போராடும் என்றும் அவர் கூறினார்.

பின்னர் இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக, இந்த தீர்மானத்தின் மீது பேசிய பிஜேபி சட்டமன்றக் குழு தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், யுஜிசி-யின் வரைவு அறிக்கையில் உள்ள குறைகளை மத்திய அரசிடம் சுட்டிக்காட்ட அவகாசம் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

பின்னர், இந்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி சட்டமன்ற உறுப்பினர்கள் பேரவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, திருச்சி வழியாக இயக்கப்படும் நான்கு ரயில்கள், இன்றும் நாளையும் ஸ்ரீரங்கம் ரயில் நிலையத்தில் நின்று செல்லும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

இதன்படி, சென்னை எழும்பூர் - கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ், கன்னியாகுமரி – சென்னை, கொல்லம் - சென்னை மற்றும் எழும்பூர் - கொல்லம் ஆகிய ரயில்கள் இரண்டு நிமிடம் ஸ்ரீரங்கத்தில் நின்று செல்லும்.

இதனிடையே, பௌர்ணமி கிரிவலத்தை ஒட்டி விழுப்புரம் - திருவண்ணாமலை இடையே வரும் 13ஆம் தேதி முன்பதிவில்லா சிறப்பு ரயில் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பங்களாதேஷில் நிலவும் அரிசி தட்டுப்பாட்டை போக்க, இந்தியா இரண்டாவது கட்டமாக 27 ஆயிரம் டன் அரிசியை அனுப்பி வைத்துள்ளது.

ஆந்திர மாநிலம், காக்கிநாடா துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்ட இந்த அரிசி ஏற்றிய கப்பல், நாளை பங்களாதேஷின் சட்டோகிராம் துறைமுகத்தை சென்றடையவுள்ளது.

முதற்கட்டமாக கடந்த மாதம் 26ஆம் தேதி இந்தியா, 24 ஆயிரத்து 690 டன் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களை பங்களாதேஷிற்கு அனுப்பி வைத்தது.

வரும் மார்ச் மாதத்திற்குள் இந்தியா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து மொத்தம் 6 லட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய பங்களாதேஷ் அரசு முடிவு செய்துள்ளது.

>>>>>><<<<<<

யுக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்தனர், 30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

யுக்ரைனின் **Zaporizhzhia** பகுதியில் ரஷ்ய படைகள் வெடிகுண்டுகளை வீசி தாக்கியது தொடர்பான வீடியோ காட்சி ஒன்றை அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் ஜெலன்ஸ்கி எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளார்.

இந்த காணொலியில் உரையாற்றியுள்ள திரு. ஜெலன்ஸ்கி, **Zaporizhzhia** நகரை குறிவைத்து விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை யுக்ரைன் அரசு வழங்கி வருவதாக கூறியுள்ளார்.

**>>>>>><<<<<<**

போபாலில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சாய் கார்த்திக் – விஷ்ணுவர்தன் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 3-6, 10-4 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Adil - Prajwal** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

தோஹாவில் நடைபெற்.று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சரத்கமல் – ஸ்நேகித் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 11-3, 8-11, 11-1, 11-9 என்ற செட்கணக்கில் கத்தாரின் **Mohammed - Abdullah** இணையை வென்றது.

**>>>>>><<<<<<**

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் வேதாந்தா கலிங்கா அணி இன்று குணஷிகா அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8-15-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<